padippakam



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

28

தமிழரசுக் கட்சியினர் காலிமுகத்திடலில் தாம் மேற்கொண்ட மறியல் போராட்டம் பொலிசாரின் மேற்பார்வையில் சிங்களக் காடையர்களால் தாக்கி கலைக்கப்பட்டதை ஆட்சேபித்து திருகோணமலைக்கு பாதயாத்திரை ஒன்றை மேற்கொண்டதுடன், ஒரு வருட காலத்துக்குள் தமிழையும் ஆட்சிமொழியாக்கி, இனப் பிரச்சினையைத் தீர்க்காவிட்டால் தாம் மீண்டும் ஒரு மறியல் போராட்டத்தை நடத்

வாயே திறக்கவில்லை.

எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலான தமிழரசுக்கட்சியினர் கூட பண்டாரநாயக்கா பௌத்த சிங்கள தேசியவாதத்தை தூக்கிப்பிடித்த நிலையிலும் கூட, தமிழீழ தேசியத்தை நிலைநிறுத்துவதற்கு முயலவில்லை. மாறாக இலங்கைத் தேசியத்துக்குள் தமிழர்களுக்கு மாநில ஆட்சி வேண்டும் என்றுதான் கோரினார்கள். இந்தக் கோரிக்கை அவர்களது வர்க்க நலனையும், பொருளாதார நலனையும், அடிப்படையாகக் கொண்டிருந்தது என்பது மறுக்கப்பட முடியாததாகும்.

★★★★

பண்டா-செல்வா ஒப்பந்தம் பற்றிய செய்தி வெளிவந்தவுடனேயே, ஐக்கிய தேசியக் கட்சி

ந்து எழுந்தனர். நூற்றுக்கும் மேற்பட்ட பௌத்த பிக்குகள் S.W.R.D.பண்டாரநாயக்காவின் வீட்டை சுற்றி வளைத்து எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை கைவிடுமாறு கோசமெழுப்பினர். பயந்துபோன S.W.R.D. பண்டாரநாயக்கா 1958-ம் ஆண்டு சித்திரை மாதம் 9-ம் திகதி எஸ்.ஜே.வி செல்வநாயத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை ஒரு தலைப்பட்சமாக கிழித்தெறிந்தார்.

இந்தக் காலகட்டத்தில் தீவிரமான சிங்கள இனவாதியான கே.எம்.பி. இராஜரட்னா தென் பகுதியில் இருந்த தமிழ் எழுத்துக்களுக்கு தார்பூசி அழிக்கும் இயக்கத்தை ஆரம்பித்தார்.

வடக்கே அப்பாப்பிள்ளை

றையைச் சேர்ந்த ஒரு சிங்கள ஆசிரியை மட்டக்களப்பில் வைத்து மார்புகள் அறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்டு விட்டதாகவும், தனிப்பட்ட பகை காரணமாக மட்டக்களப்

வியது. பொலநறுவை, பதுளை, குருநாகல், பாணந்துறை, காலி, மாத்தறை ஆகிய இடங்களில் இருந்த தமிழர்களின் கடைகள், வீடுகள் எல்லாம், சூறையாடப்பட்டபின் தீயிட்டுக் கொழுத்



பில் கொலை செய்யப்பட்ட, நுவரேலியாவின் முன்னாள் மேயர் செனிவிரட்ண தமிழர்களால் இன அடிப்படையில் கொலை செய்யப்பட்டதாக தென்பகுதியெங்கும் கதை பரப்பப்பட்டது. இதனால் தென்பகு

தப்பட்டன. பல இடங்களில் தமிழர்கள்; அவர்கள் பயணம் செய்த வாகனங்களுக்குள் வைத்து உயிருடன் எரிக்கப்பட்டனர். பல்வேறு இடங்களிலும் தமிழ் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டனர்.

# ஜே.ஆரின் பாத யாத்திரையும் 1958 இனக் கலவரமும்

தப் போவதாகவும் அறிவித்தனர்.

ஒரு வருட காலமுடிவில் பிரதமர் S.W.R.D. பண்டாரநாயக்கா, எஸ். ஜே.வி செல்வநாயகத்தை சந்தித்து மறியல் போர் எதையும் நடத்த வேண்டாம் என்றும், இனப் பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தலாமென்றும் கூறினார். இதன்படி 1957-ம் ஆண்டு ஆடி மாதம் இரண்டுபேருக்குமிடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

பண்டா- செல்வா ஒப்பந்தம் என்று அழைக்கப்பட்ட இவ்வொப்பந்தம், வடக்கு கிழக்கு பிரதேசத்தை தமிழர் தாயகம் என்று ஏற்றுக்கொண்டது உட்பட பல நல்ல அம்சங்களை உள்ளடக்கியிருந்தது.

இந்த இடத்திலே ஒரு

யினர், பண்டாரநாயக்கா நாட்டின் ஒரு பகுதியை தமிழர்களுக்கு பிரித்துக் கொடுத்துவிட்டார் என்று பிரச்சாரம் செய்தனர். ஐக்கியதேசியக் கட்சியின் முன்னணி உறுப்பினராக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா இவ் ஒப்பந்தத்தை எதிர்த்து தன்னுடைய ஆதரவாளர்களுடன் கொழும்பிலிருந்து கண்டிக்கு பாதயாத்திரை ஒன்றை மேற்கொண்டார்.

இதை எதிர்த்து அப்போது கம்பஹா தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த இடது சாரித் தலைவர்களில் ஒருவரான எஸ்.டி. பண்டாரநாயக்கா , அவரது ஆதரவாளர்களுடன் 'இம்புல்கொட' என்னுமிடத்தில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா குழுவினர் வந்த பாதையில் தரையில் வீழ்ந்து படுத்தும்,

**1957-ம் ஆண்டு ஆடி மாதம் கைச்சாத்திடப்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தம் என்று அழைக்கப்பட்ட இவ்வொப்பந்தம், வடக்கு கிழக்கு பிரதேசத்தை தமிழர் தாயகம் என்று ஏற்றுக்கொண்டது உட்பட பல நல்ல அம்சங்களை உள்ளடக்கியிருந்தது.**



விடயம் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியதாக உள்ளது. 1956-ம் ஆண்டு தேர்தலுக்கு முன் சிங்களத்துடன் தமிழ் மொழிக்கு சம அந்தஸ்த்து தாராவிட்டால், தனி நாடு கோரிப் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்த தமிழ்க் காங்கிரஸ்கட்சி உறுப்பினர்கள் தேர்தலில் படுதோல்வியடைந்த பின் அதைப் பற்றி

அவர்களை நோக்கி கற்களை வீசியும் ஊர்வலத்தை கலைந்து போகச் செய்தனர்.

ஆனாலும், தமிழர்களுக்கு S.W.R.D. பண்டாரநாயக்கா நாட்டைப் பிரித்துக் கொடுக்கப் போகிறார் என்ற இனவாத நெருப்பு, சிங்களப் பகுதியெங்கும் விரைவாகப் பரவியது. பௌத்த சங்கத்தினர் பண்டாரநாயக்காவுக்கு எதிராகக் கிளர்

அமிர்தலிங்கம் தலைமையில் ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் ஆரம்பமாகியது.

1956-க்கு முன் இலங்கையில் ஓடிய வாகனங்களின் இலக்கத்தகடுகளிலுள்ள இலக்கங்கள் ஆங்கில தொடர் எழுத்துக்களுடனேயே பொறிக்கப்பட்டிருந்தன. சிங்களம் மட்டும் சட்டம் அமுலாக்கப்பட்டபின் ஆங்கில தொடர் இலக்கத்துக்குப் பதிலாக சிங்கள எழுத்தான 'ஸ்ரீ' பயன்படுத்தப்பட்டது. இந்த எழுத்தை அழிக்கும் போராட்டத்தையே தமிழரசுக்கட்சி அ.அமிர்தலிங்கம் தலைமையில் செய்தது.

இரண்டு பக்கமும் மாறி மாறி எழுத்துக்களை அழிக்கும் போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்த போது அது தமிழர்களுக்கு எதிரான மிகப் பெரிய இனக்கலவரமாக வெடித்தது.

1958-ம் ஆண்டு மே மாதம் 22-ம் திகதி அனுராதபுரத்தைக் கைப்பற்ற வவுனியாவிலிருந்து ஒரு தமிழர் படை வந்துகொண்டிருப்பதாகவும், அதுபோல் மட்டக்களப்பிலிருந்தும், திருகோணமலையிலிருந்தும் கூட தமிழர் படைகள் புறப்பட்டுவிட்டதாக தென்பகுதியில் வதந்தி பரவியது. அத்துடன் பாணந்து

தியில் இருந்த தமிழர்களின் உயிருக்கும், உடமைகளுக்கும் எந்த நேரமும் அச்சுறுத்தல் நேரக்கூடிய சூழ்நிலை உருவாகியது. இந்த நேரத்தில் பிரதமர் என்ற வகையில் S.W.R.D. பண்டாரநாயக்கா நாட்டுமக்களுக்கு உண்மையை எடுத்துக் கூறி அமைதியை உண்டாக்குவதற்குப் பதிலாக நுவரேலியா முன்னாள் மேயர் செனிவிரட்ணாவின் கொலைக்கு தமிழர்களே காரணம் என்று மறைமுகமாக குற்றஞ்சாட்டும் வகையில் வானொலி உரையொன்றை ஆற்றியது எரிகின்ற நெருப்புக்கு எண்ணை ஊற்றுவதுபோல் அமைந்துவிட்டது.

1958-ம் ஆண்டு மே மாதம் 22-ம் திகதி இரவு பொலநறுவையிலிருந்து கொழும்புக்கு வந்த தொடருந்தில் புகுந்த 500 க்கும் மேற்பட்ட சிங்களக் காடையர்கள், அதில் பிரயாணம் செய்த தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள். பல தமிழர்கள் வெட்டிக் கொல்லப்பட்டனர். பல தமிழ் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டனர். தமிழர்களது உடமைகளெல்லாம் கொள்ளையடிக்கப்பட்டன.

மறுநாள் மே மாதம் 23-ம் திகதி கலவரம் நாடெங்கும் பர

அரசாங்கக் கணக்கின்படி கொழும்பில் மட்டும் 12000 தமிழர்கள் இந்த இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு அகதி முகாம்களில் தஞ்சமடைந்தனர். தமிழர்களுக்கு பாதுகாப்பு தமிழர் தாயகத்தில்தான் என்பதை உணர்த்தும் விதத்தில் தென் பகுதியில் இருந்த அகதிகள் கப்பல் மூலமாக பருத்தித்துறை துறைமுகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மே மாதம் 22-ம் திகதி நிலைமை மோசமடைய ஆரம்பித்த போதே, இடதுசாரி அணியைச் சேர்ந்த ஒரு பிரிவினர் S.W.R.D. பண்டாரநாயக்காவைச் சந்தித்து, நாட்டில் உடனடியாக அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தி கலகக்காரர்களை தயவு தாட்சண்யமின்றி அடக்குமாறு கோரிக்கை விடுத்தனர். ஆனால் 'சிறிய விடயத்தை பெரிதுபடுத்தாதீர்கள் என்று கூறி' S.W.R.D. பண்டாரநாயக்கா அதற்கு மறுத்துவிட்டார்.

தமிழர்களுக்கு உடல், உள, உடமை ரீதியான இழப்புக்கள் எல்லாம் ஏற்பட்ட பின்பு கலவரம் மோசமாக நடந்த தினத்திலிருந்து 6-ம் நாள் அதாவது 1958-ம் ஆண்டு மே மாதம் 29-ம் திகதியே அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

இந்தச் சட்டத்தின் கீழ், இனக்கலவரத்தில் ஈடுபட்டு, தமிழர்களுக்கு அழிவை உண்டாக்கிய சிங்களக் காடையர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்குப் பதில், தமிழரசுக் கட்சித் தலைவர்கள் உட்பட 150 தமிழர்களை பிடித்து சிறையில் அடைத்தது மிக முக்கியமான சம்பவமாகும்.

- நக்கீரன்

படிப்பகம்